கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:திருமதி.அ.லலிதா, எம்.ஏ,

ந.க.அ4/34664/2019 நாள்: 31.01.2020

பொருள் பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கடலூர் மாவட்ட வருவாய் அலகு - திரு.ப.அருள், தட்டச்சர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர் - தட்டச்சர் நிலையில் - பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தமைக்கு ஆணை வெளியிடுதல்

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.7244/PSD-A4/2012 நாள்:04.03.2013
2. கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/2577/2013 நாள்: 09.03.2013
3. கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/2577/2013 நாள்: 15.05.2013 மற்றும் 20.07.2015
4. தமிழ்நாடு மாநில கூர்நோக்கு ஆய்வு குழு -III ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தலைமைச் செயலகம், சென்னை -9 நடவடிக்கைகள் எண்.14036/CV-5/2017-3 நாள்:24.10.2019
5. மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் கடித ந.க.எண்.350/2018/திஅ நாள்: 08.11.2019
6. வேப்பூர், வட்டாட்சியர் கடித எண்.ந.க.அ2/1106/2019(2) நாள்: 25.11.2019
7. கடலூர் மாவட்ட வருவாய் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க.அ4/34664/2019 நாள்:28.01.2020
8. தொடர்புடைய ஆவணங்கள்

&&&&&&

உத்தரவு:

கடலூர் மாவட்ட வருவாய் அலகில், வேப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திரு.ப.அருள் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட தொகுதி-4 2007-2008 மற்றும் 2012-2013 தேர்வில் தேர்ச்சி பெற்று, கடலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார். இவர் பழங்குடி இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர். சாதி சான்று குறித்து மெய்தன்மை அறிக்கையினை மாநில கூர்நோக்கு குழுவிடம் பெறப்பட்ட பின்னரே மேற்சொன்ன திரு.ப.அருள் என்பவரது பணியை தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும். இந்நிலையில் சாதிசான்றின் மெய்தன்மை அறிக்கை பெறப்படாமல் பிறப்பிக்கப்பட்ட 15.05.2013 நாளிட்ட பணிவரன்முறை ஆணை மற்றும் 20.07.2015 நாளிட்ட தகுதிகாண் பருவ நிறைவு ஆணை ஆகியவை வழுவின் காரணமாக கடலூர் மாவட்ட வருவாய் அலுவலரின் 28.01.2020 செயல்முறை ஆணையில் ரத்து செய்து உத்தரவிடப்பட்டது. இந்நேர்வில் ஆவணங்களை மீளப் பரிசீலித்து திருத்திய ஆணை பிறப்பிக்க வேண்டியுள்ளது.

2) திரு.ப.அருள், தட்டச்சர் என்பவரது பணிவிபரங்கள் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. தனியருக்கு வழங்கப்பட்ட பழங்குடியினர் சாதி சான்று மெய்தன்மை உடையதாகும் என பார்வை நான்கில் காணும் 24.10.2019 நாளிட்ட மாநில கூர்நோக்கு ஆய்வுக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்சொன்ன திரு.ப.அருள் என்பவருக்கு தட்டச்சர் நிலையில் பின்வருமாறு 09.04.2013 முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் இவர் பணியில் சேர்ந்து பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தை பின்வருமாறு 08.04.2015 பி.ப திருப்திகரமாக நிறைவு செய்ததாகவும், தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ் விளம்பி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | அலுவலர் பெயர் மற்றும் பணிபுரிந்து வரும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்யும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | ப. அருள், தட்டச்சர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர் | 09.04.2013 மு.ப. | 09.04.2013 மு.ப. | 08.04.2015 பி.ப |

(ஒம்) அ.லலிதா
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கடலூர்.

/உ.ந.உ.ப./

அலுவலக மேலாளர் (பொது)
31.1.20

31/1/20

நகல்: திரு.ப.அருள், தட்டச்சர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர்,
நகல்: வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர்